www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Remove Watermark Now

கடலூர்

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2019

12 – ஆம் வகுப்பு **தமிழ்** 121274

காலம் : 1.30 மணி மொ.மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. 10X1=10

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பொருத்துக.

அ. ஆமந்திரிகை – பட்டத்து யானை
ஆ. அரசு உவா – மூங்கில்
இ. கழஞ்சு – இடக்கை வாத்தியம்
ஈ. கழை – எடை அளவு

அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

2. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) அண்மைக் காட்சித் துணிப்பு
ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ)காட்சி மறைவு

3. யானைக்கு புக்க புலம் போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்கும் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்கு பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்குப் பயனபடும், பிறருக்கும் பயன்படும்

4. பொருந்தாத ஒன்றினைக் கண்டறிக

அ. தனித்தமிழ்த் தந்தை – 1. மு.வரதராசனார்
ஆ. ஆராய்ச்சிப் பேரறிஞர் – 2. மயிலை.சீனி. வேங்கடசாமி
இ. தமிழ்த் தென்றல் – 3. திரு.வி.க
ஈ. மொழி ஞாயிறு – 4. தேவநேயப் பாவாணர்

5. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் – இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

6. முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது

அ) கூற்று 1சரி, கூற்று 2தவறு ஆ) கூற்று 1 சரி, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

7. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் செய்வது

அ) கடந்த காலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

8. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன், நெடுங்கிள்ளியை, பாணர்
ஆ) சோழன், நலங்கிள்ளியை, கோவூர் கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
ஈ) கரிகாலனை, உருத்திரங் கண்ணனார்.

9. "சாபவிமோசனம்" "அகலிகை" கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

10. Debit card என்பதன் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) கடவுச்சீட்டு ஆ) அனுமதிச்சீட்டு
இ) பற்று அட்டை ஈ) கேட்பு வரைவோலை



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

Remove Watermark Now

II. குறுவினா (எவையேனும் நான்கனுக்கு விடையெழுதுக) 4x2=8

11. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
12. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.
13. "பருவத்தே பயிர் செய்" நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
14. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?
15. பெருங்கடல், தலைக்கோல் – பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
16. நகை, அறிந்து – உறுப்பிலக்கணம் தருக.

III. சிறுவினா (எவையேனும் நான்கனுக்கு விடையெழுதுக) 4x3=12

17. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
18. எங்கிருந்தோ வருகிறது
    வண்ணத்துப் பூச்சியொன்று
    பறவைளும் வரக்கூடும் நாளை – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
19. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க?
20. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
21. யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையும் பொருளையும் பொருத்தி விளக்குக.
22. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

IV. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடையெழுதுக) 4x5=20

23. மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக. (அல்லது)
சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது – விளக்குக.

24. "குழல் வழி நின்றது யாழே" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)
உவமையணியை சான்று கொண்டு விளக்குக.

25. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்து கூறி, ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக.

பூமிச்சருகாம் பாலையை
  முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
  புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
  இரவுலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
  விறகெரிக்க வீசுவேன்.

–நா.காமராசன் (அல்லது)

தமிழாக்கம் தருக.

1. A Penny saved is a Penny gained.
2. To the good people world appears good.
3. Time and tide wait for none.
4. Slow and steady wins the race.
5. Sense of humour is a healthy way of life.

26. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.